ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2069/37 - 2018 මැයි මස 03 වැනි බ්‍රහස්පතින්දා - 2018.05.03

2069/37 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு மே மாதம் 03 ஆந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

பணிப்புரை இல. 65

**2003 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க, பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைச் சட்டம்**

12(2) ஆம் பிரிவின் கீழான பணிப்புரை

2003 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க, பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைச் சட்டத்தின் 12(2) ஆம் பிரிவினால் உரித்தளிக்கப்பட்டுள்ள தத்துவங்களின்கீழ் தொழிற்படுகின்ற பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையானது, சருமத்தில் பூசுவதற்குப் பயன்படுத்தப்படும் கிறீம் மற்றும் சருமப் பூச்சு வகைகளின் தயாரிப்பாளர்கள், இறக்குமதியாளர்கள், பொதியிடுவோர், விநியோகஸ்தர்கள் அல்லது வியாபாரிகள் இலங்கைக் கட்டளைகள் நிறுவகத்தினால் வழங்கப்பட்ட SLS 743 இல் விதித்துரைக்கப்பட்டவாறு, ISO/ TR 17276 இற்கமைவாகப் பதிசோதிக்கப்படும்போது உள்ளடக்கப்பட்டுள்ள உலோகங்களின் ஆகக்கூடிய அனுமதிக்கத்தக்க அளவினை உறுதிப்படுத்தினாலன்றி அத்தகைய சருமத்தில் பூசுவதற்குப் பயன்படுத்தப்படும் கிறீம் மற்றும் சருமப் பூச்சு வகைகளினை தயாரிக்கவோ, இறக்குமதி செய்யவோ, விநியோகிக்கவோ, பொதியிடவோ, களஞ்சியப்படுத்தவோ அல்லது விற்பனைக்காக களஞ்சியப்படுத்தவோ அல்லது விற்பனை செய்யவோ அல்லது விற்பனைக்காக அல்லது மொத்த விற்பனைக்காக அல்லது சில்லறை விற்பனைக்காக கோரவோ முடியாதென இத்தால் பணிப்புரை விடுக்கின்றேன்.

| உள்ளடக்கப்பட்டுள்ள உலோகம் | அனுமதிக்கத்தக்க உலோகத்தின் ஆகக்கூடிய செறிவு |
|---|---|
| ஈயம் (Lead) (Pb) | 10 மி. கி./கி. கி. |
| ஆர்செனிக் (Arsenic) (As) | 3 மி. கி./கி. கி. |
| பாதரசம் (mercury) (Hg) | 1 மி. கி./கி. கி. |
| கட்மியம் (Cadinium) (cd) | 3 மி. கி./கி. கி. |

சருமத்தில் பூசுவதற்குப் பயன்படுத்தப்படும் கிறீம் மற்றும் சருமப் பூச்சு வகைகள் பின்வருவனவற்றினைக் கொண்டிருக்கும் :-

(1) ஒப்பனைக் கிறீம்களும் சருமப் பூச்சு வகைகளும்

(2) சரும சுத்திகரிப்பு கிறீம்களும் சருமப் பூச்சு வகைகளும்

(3) சருமத்தை ஈரப்பதமாக்கும் கிறீம்களும் சருமப் பூச்சுவகைகளும்

1A - PG 4027 — 207 (2018/05)

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

(4) சரும முடி அகற்றும் கிறீம்களும் பூச்சு வகைகளும்

(5) சூரிய ஒளியிலிருந்து பாதுகாக்கும் கிறீம்களும் சருமப் பூச்சு வகைகளும்

(6) சருமத்தினை வெண்மையாக்கும் கிறீம்களும் சருமப் பூச்சு வகைகளும்

(7) கரும்புள்ளிகளை நீக்கும் (வெனிஷிங்) கிறீம்களும் சருமப் பூச்சு வகைகளும்

(8) குளிரூட்டும் கிறீம்களும் சருமப் பூச்சு வகைகளும்

(9) இவை தொடர்பாக ஒழுங்குமுறைப்படுத்த உரிமம் அளிக்கப்பட்ட நிறுவனங்களால் அடையாளங் காணப்பட்ட வேறு ஏதேனும் சரும கிறீம்களும் சருமப் பூச்சுக்களும்

இந்தப் பணிப்புரையானது 2018, நவெம்பர் 01 ஆந் திகதியிலிருந்து அமுலுக்கு வருகின்றது.

பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் கட்டளைப்படி,

ஹசித்த திலகரத்ன,
தவிசாளர்.

கொழும்பு,
2018, 01.

05-512/1

---

பணிப்புரை இல. 66

**2003 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க, பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைச் சட்டம்**

10 (1) (அ) ஆம் பிரிவின் கீழான பணிப்புரை

2003 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க, பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைச் சட்டத்தின் 10 (1) (அ) ஆம் பிரிவினால் உரித்தளிக்கப்பட்டுள்ள தத்துவங்களின்கீழ் தொழிற்படுகின்ற பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையானது, சருமத்தில் பூசுவதற்குப் பயன்படுத்தப்படும் கிறீம் மற்றும் சருமப் பூச்சு வகைகளின் தயாரிப்பாளர்கள், இறக்குமதியாளர்கள், பொதியிடுவோர், விநியோகஸ்தர்கள் அல்லது வியாபாரிகள் அனைவரும் பின்வரும் தகவல்களினை பூசுவதற்குப் பயன்படுத்தப்படும் கிறீம் மற்றும் சருமப் பூச்சு வகைகளின் ஒவ்வொரு போத்தல், பொதி அல்லது கொள்கலனின் மீது தெளிவாகவும் அழிக்க முடியாத வகையிலும் குறிக்கப்படுதல் வேண்டுமென இத்தால் பணிப்புரை விடுக்கின்றது. எவ்வாறாயினும், 50 கி./50 மி. லீ. அல்லது அதற்குக் குறைந்த பொதி அளவுகளினைக் கொண்டுள்ள சரும கிறீம்கள் அல்லது சருமப் பூச்சுக்களுக்கு கீழ்க்குறிப்பிட்ட தகவல்களினை உள்ளடக்கிய துண்டுப் பிரசுரம் ஒன்றை இணைக்கலாம்/வழங்கப்படலாம் :

(1) பொருளின் பெயர்

(2) உற்பத்தியாளரின் பெயரும் முகவரியும்

(3) இறக்குமதியாளர்/இலங்கை விநியோகத்தரின் பெயர் மற்றும் முகவரி

(4) உற்பத்தி செய்யப்பட்ட நாடு

(5) பண்டப் பெயர் (Brand Name)

(6) கொள்ளளவு/நிறை

(7) தொகுதி இலக்கம் அல்லது குறியீட்டு இலக்கம் அல்லது தொகுதிகாண் (Lot) இலக்கம்

(8) உற்பத்தித் திகதி

(9) காலாவதி அல்லது பாவனைக்கு உகந்த திகதி

(10) ஆகக்கூடிய சில்லறை விலை

(11) உள்ளடக்கங்களின் விபரப் பட்டியல்

(12) பாவனைக்கான அறிவுறுத்தல்கள்

(13) எச்சரிக்கை அறிவித்தல்கள், ஏதேனுமிருப்பின்.

சருமத்தில் பூசுவதற்குப் பயன்படுத்தப்படும் கிறீம் மற்றும் சருமப் பூச்சு வகைகள் பின்வருவனவற்றினைக் கொண்டிருக்கும் :-

(1) ஒப்பனைக் கிறீம்களும் சருமப் பூச்சு வகைகளும்
(2) சரும சுத்திகரிப்பு கிறீம்களும் சருமப் பூச்சு வகைகளும்
(3) சருமத்தை ஈரப்பதமாக்கும் கிறீம்களும் சருமப் பூச்சுவகைகளும்
(4) சரும முடி அகற்றும் கிறீம்களும் பூச்சு வகைகளும்
(5) சூரிய ஒளியிலிருந்து பாதுகாக்கும் கிறீம்களும் சருமப் பூச்சு வகைகளும்
(6) சருமத்தினை வெண்மையாக்கும் கிறீம்களும் சருமப் பூச்சு வகைகளும்
(7) கரும்புள்ளிகளை நீக்கும் (வெனிஷிங்) கிறீம்களும் சருமப் பூச்சு வகைகளும்
(8) குளிரூட்டும் கிறீம்களும் சருமப் பூச்சு வகைகளும்
(9) இவை தொடர்பாக ஒழுங்குமுறைப்படுத்த உரிமம் அளிக்கப்பட்ட நிறுவனங்களால் அடையாளங் காணப்பட்ட வேறு ஏதேனும் சரும கிறீம்களும் சருமப் பூச்சுக்களும்

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையானது 2011, மாச்சு 22 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானி இலக்கம் 1698/8 இல் பிரசுரிக்கப்பட்ட பணிப்புரை இலக்கம் 35 இலிருந்து சருமப் பூச்சு வகையினை நீக்குவதற்கு இந்தப் பணிப்புரையினை இத்தால் விடுக்கின்றது.

இந்தப் பணிப்புரையானது 2018, நவெம்பர் 01 ஆந் திகதியிலிருந்து அமுலுக்கு வருகின்றது.

பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் கட்டளைப்படி,

ஹசித்த திலகரத்ன,
தவிசாளர்.

கொழும்பு,
2018, மே 01.

05-512/2

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.